**இலங்கை தேசிய திரைப்பட கூட்டுத்தாபனம் - 2021**

-----------------------------------------------------------------------

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இலங்கை தேசிய திரைப்பட் கூட்டுத்தாபனத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தினதும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளினதும் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள், கூட்டுத்தாபனத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்.எல்.ஏயூ.எஸ்.எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கூட்டுத்தாபனம் தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாவதுடன், முகாமைத்துவமானது கூட்டுத்தாபனத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையில் கணக்கு வைத்தல் மற்றும் கூட்டுத்தாபனத்தின் தொடர்ந்தியங்குரிய விடயங்களை வெளிப்படுத்தலும் முகாமைத்துவத்தின் பொறுப்பாக உள்ளது.

கூட்டுத்தாபனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை பரிசோதிக்கும் பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம், கூட்டுத்தாபனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ் கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி, உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய

பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இயலுமான அளவில் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதுமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கூட்டுத்தாபனத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கூட்டுத்தாபனத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் சபை இணங்கியிருந்ததா என்பதும்,

- அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்தனவா என்பதும், மற்றும

- வளங்கள ் கால வரையறைகளினுள்ளேயும ் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு மீதான உள்ளகக் கட்டுப்பாடு

கொடுக்கல் வாங்கல்கள் முகாமைத்துவத்தின் பொதுவான மற்றும் குறித்துரைக்கப்பட்ட அங்கீகாரத்துடன் மேற்கொள்ளப்படுகின்றன, பொருத்தமான அறிக்கையிடல் நியமங்களிற்கிணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பதற்கு தேவையானவாறு கொடுக்கல் வாங்கல்கள் பதிவு செய்தல் மற்றும் சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பை பேணுதல், முகாமைத்துவத்தின் பொதுவான மற்றும் குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்துடன் மாத்திரமே சொத்துக்களை அணுகுவதற்கு, பதிவு செய்யப்பட்ட சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பு ஏற்கனவேயுள்ள சொத்துக்களுடன் நியாயமான கால இடைவெளிகளில் ஒப்பீடு செய்தல் மற்றும் ஏதாவது வேறுபாடுகள் தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை எடுத்தல் போன்றவற்றிற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதற்கு போதுமான ‘‘திட்டமிட்டு பேணுதல்’’ உள்ளகக் கணக்கீட்டுக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை பேணிச் செல்லல் நிறுவனங்களிற்கு அவசியமாக உள்ளது.

### 1.5.2 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | குறித்த நியமம் தொடர்பாக இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 02 வங்கிக் கணக்குகளிற்குரிய, 2021 திசெம்பர் 31 திகதி வங்கி இணக்கக் கூற்றினுள் உள்ளடங்கும் 2022 சனவரி மற்றும் பெப்ரவரி மாதங்களில் அடையாளம் கண்டிருந்த ரூபா 52,680 ஆன இனங்காணப்படாத நேரடி வங்கி செலவு வைத்தல், இலங்கை கணக்கீட்டு நியமம் 10 இன் பந்தி 03 மற்றும் பந்தி 08 பிரகாரம் 2021 ஆண்டின் நிதிக்கூற்றில் சீராக்காது தொங்கல் கணக்கில் உட்படுத்தப்பட்டிருந்தது. | 2022 இறுதிக் கணக்குகளை கணக்காய்விற்கு சமரபிக்கும் போது அனைத்து சரிசெய்தல்களையும் மேற்கொள்வதாக. | நியம ஏற்பாடுகளுக்கு இணங்க தொங்கல் கணக்கின் மீதியை சரிசெய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 16 இன் 34 ஆம் பந்தி பிரகாரம் கூட்டுத்தாபன ஆதன பொறிகள் மற்றும் உபகரணங்களின் நியாயமான பெறுமானம் காலரீதியாக மாற்றமடைவதன் மீது சொத்துக்களை 03 ஆண்டுகளிற்கு அல்லது 05 ஆண்டுகளிற்கு ஒருமுறை மீள்மதிப்பீடு செய்ய வேண்டிய போதும், கூட்டுத்தாபனத்தினால் காணி மற்றும் கட்டிடங்களை மீள்மதிப்பீடு செய்திருக்கவில்லை. | காணி மற்றும் கட்டிடங்களின் மதிப்பீட்டு அறிக்கையை பெற்றுக் கொள்ள தேவையான நடவடிக்கை இடம் பெறுகின்றது. | நியம ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 16 இன் 51 ஆம் பந்தி பிரகாரம் நடைமுறையல்லாத சொத்துக்களிற்காக பயனுள்ள ஆயட்காலத்தை வருடாந்தம் மீளாய்வு செய்யாததால் கூட்டுத் தொகை ரூபா 171,764,741 பெறுமதியான நிலையான சொத்துக்கள் முழுமையாக பெறுமானத் தேய்விடப்பட்டிருந்த போதும், தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டதுடன் நியமத்தின் இலக்கம் 79(ஆ) பந்தி பிரகாரம் அச் சொத்துக்கள் தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தி இருக்கவில்லை. அதன் பிரகாரம் அச் சொத்துக்களின் பயனுள்ள ஆயுட்காலம் தொடர்பான மதிப்பீட்டுத் தவறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 08 பிரகாரம் திருத்தியமைக்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | அவதானிப்பு சரியானது. இப்பெறுமதிகளுடனான நிலையான சொத்துக்கள் தற்போது பயன்படுத்தப்படாததுடன் அச் சொத்துக்களில் தொல் பொருளாக கண்காட்சிப்படுத்த முடியுமான சொத்துக்கள் தற்போது திரையறங்கில் கண்காட்சிக்காக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. | நியம ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | 2021 திசெம்பர் 31 திகதி கூட்டுத்தாபனத்தின் மெல்ல அசையும் மற்றும் அசையாத இருப்புக்களின் பெறுமதி ரூபா 8,597,176 ஆனது. இலங்கை கணக்கீட்டு நியமம் 16 இன் 79 (அ) ஆம் பந்தி பிரகாரம் விளைவற்ற சொத்துக்கள் தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் தேறிய புத்தகப் பெறுமதி | அவதானிப்பு சரியானது. | நியம ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

வெளிப்படுத்தப்பட வேண்டிய போதும், கூட்டுத்தாபன வளவில் மற்றும் அதற்கு வெளியில் கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான கட்டிடங்களில் காணப்படும் விளைவற்ற சொத்துக்கள் மற்றும் காலாவதியான பழைய சொத்துக்கள் பற்றிய போதியளவான வெளிப்படுத்தல்களை மேற்கொண்டிருக்கவில்லை.

### 1.5.3 கணக்கீட்டுக் குறைபாடுகள

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்காக கூட்டுத்தாபன கணனி கணக்கீட்டு மென்பொருளூடாக (Ouick Book) பெற்றுக் கொண்ட நிதி நிலைமை கூற்றின் பிரகாரம் மொத்த சொத்துப் பெறுமதி ரூபா 902,469,609 ஆன போதும் கணக்காய்விற்கு சமர்பித்த நிதி நிலைமைக் கூற்றில் அது ரூபா 1,041,333,428 ஆக காட்டப்பட்டு இருந்ததுடன் கணனி கணக்கீட்டு மென்பொருளூடாக பெற்றுக் கொண்ட விரிவான வருமான கூற்றின் பிரகாரம் ரூபா 6,715,038 ஆன பற்றாக்குறை காணப்பட்ட போதும் கணக்காய்விற்கு சமர்பித்த விரிவான வருமான கூற்றில் அதை ரூபா 9,417,553 ஆன மிகையாக காட்டியதில் அம் மீதிகளிற்கிடையில் ரூபா 154,996,410 ஆன வித்தியாசம் நிலவியது. | அவதானிப்பு சரியானது. QB கணக்கீட்டு பென்பொருளூடாக பெற்றுக் கொண்ட நிதி நிலைமை கூற்று மற்றும் கணக்காய்விற்கு சமர்பித்த நிதி நிலைமைக் கூற்றிற்கு இடையிலான வித்தியாசத்தை கண்டறிந்ததுடன் அவற்றை சரிசெய்ய நடவடிக்கை அடுக்கிறேன். | கணனி கணக்கீட்டு பென்பொருளூடாக (Ouick Book) பெற்றுக் கொண்ட தரவுகளின் சரியான தன்மையை உறுதி செய்ய செயற்பட வேண்டியதுடன் வித்தியாசத்தை சீராக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.5.4 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| விடயம் | நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் | தொடர்புடைய பதிவேட்டின் பிரகாரம் | வேறுபாடு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | | |
| (ii) திரைப்பட வாடகை கடன்படுனர் | 395,060,050 | 375,003,940 | 20,056,110 | அவதானிப்பு சரியானது. | வித்தியாசத்தை இனங்கண்டு சரிசெய்ய வேண்டும் |
| (ii) கடன்கொடுனர் மீதி | 294,809,272 | 263,037,778 | 31,771,494 | அவதானிப்பு சரியானது. | வித்தியாசத்தை இனங்கண்டு சரிசெய்ய வேண்டும் |

### 1.5.5 நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கரு

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கூட்டுத்தாபனத்திற்கு இருந்த திரைப்பட விநியோக ஏகாதிபத்தியம் 1999 ஆண்டில் இரத்துச் செய்யப்பட்டதுடன் கூட்டுத்தாபன | அவதானிப்பு சரியானது. | கூட்டுத்தாபன வருமானத்தை மேம்படுத்திக் |

| | | |
|---|---|---|
| முக்கிய வருமானமான விநியோக தரகுப் பணம் கிடைக்காதிருந்ததுடன் கொவிட் 19 தொற்று நிலைமை காரணமாக திரையறங்குகள் மூடப்பட்டிருந்தன் மீது கூட்டுத்தாபன வருமான வழிகள் இழக்கப்பட்டிருந்தது. நிலுவை கடன் மீதியை கூட்டுத்தாபனத்திற்கு அறவிட இயலாதிருந்ததால் காசுப் பாய்ச்சலில் பலவீனம் அவதானிக்கப்பட்டது. கூட்டுத்தாபன செலவினத்தை தீர்த்துக் கொள்ள வருானம் போததததால் 2001 ஆண்டு முதல் பொது திறைசேரியிலிருந்து ஊழியர் சம்பளம் மற்றும் மூலதன செலவிற்காக ஏற்பாடு வழங்கப்பட்டு இருந்தது. மீளாய்வாண்டு மற்றும் கடந்த 05 ஆண்களில் கூட்டுத்தாபனத்திற்கு திறைசேரி மானியம் கிடைக்க முன்னர் தொடர்ந்தும் செயற்பாட்டு நட்டம் அடையும் நிலைமை காணப்பட்டதால் தற்போது அரச நிதியுதவி மற்றும் குறுங்கால வைப்பு வட்டி வருமானம் இல்லாது கூட்டுத்தாபனத்தை தொடர்ந்து நடாத்திச் செல்வது நிச்சயமற்ற தன்மை காணப்படுவதாக கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | | கொள்ளவும், நிலுவை கடன் வருமானத்தை அறவிடவும், கூட்டுத்தாபனம் தொர்ந்தியங்குவது தொடர்பாக நிலையான தன்மையை கட்டியெழுப்பவும், சட்ட பிரகாரமான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் செயற்பட வேண்டும். |

## 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | |
| (i) நிதிப் பிரமாணம் 1645(அ) மற்றும் பொது 267 படிவம் | இந்த நிதிப் பிரமாணம் மற்றும் பொது 267 படிவம் பிரகாரம் வாகனங்களிற்காக லொக் குறிப்பு புத்தகங்களை நாளாதுவரையாக பேணிச் சென்றிருக்காததுடன், லொக் குறிப்பு புத்தகங்களில் பயணம் தொடர்பாக மாதாந்த பொழிப்பு விபரம் குறிப்பிடப்பட்டிருக்வில்லை. | லொக் குறிப்பு புத்தக குறைபாடுகளை சரிசெய்ய ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணம் பிரகாரம் செயற்பாட வேண்டும். |
| (ii) நிதிப் பிரமாணம் 1645(ஆ), 1646 மற்றும் பொது | இந்த நிதிப் பிரமாணம் பிரகாரம் வாகன லொக் குறிப்பு புத்தகங்களை உரியவாறு பேணிச் | லொக் குறிப்பு புத்தகம் மற்றும் தொடர்புடைய அறிக்கைகளை | நிதிப் பிரமாணம் பிரகாரம் செயற்பாட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | 268 படிவம் | சென்றிருக்காததுடன், பொது 268 படிவம் பிரகாரம் அறிக்கையை குறிப்பிட்டு தினந்தோறும் பரிசோதித்திருக்கவில்லை. | பரிசோதிக்க நடவடிக்கை எடுக்கிறேன். | |
| (ஆ) | 2020 ஒக்டோபர் 02 திகதிய இலக்கம் 05/2020 கொண்ட சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கையின் 2(அ) மற்றும் (ஆ) பந்தி | 2021 ஆண்டில் கூட்டுத்தாபனத்திடம் 14 மோடார் வாகனங்கள் காணப்பட்டதுடன், 2020 ஆண்டு முதலே 06 வாகனங்கள் ஓட்டத்திலிருந்து அகற்றப்பட்டிருந்தன. 2022 ஆண்டளவில் ஒரு மோடார் வாகனத்தை மாத்திரம் ஓட்டத்தில் ஈடுபடுத்தி இருந்ததுடன், இச் சுற்றறிக்கை பிரகாரம் திருத்தி பயன்படுத்த அல்லது செலுத்தாத வாகனங்களை பராதீனம் செய்ய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | கூட்டுத்தாபன பணிப்பாளர் சபை அனைத்து வாகனங்களையும் திருத்தி ஓட்டத்தில் ஈடுபடுத்த ஆலோசனை வழங்கியுள்ளது. கூட்டுத்தாபன நிதி நிலைமை பிரகாரம் திருத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை பிரகாரம் செயற்பாட வேண்டும். |

**1.7 தகவல் தொழிநுட்ப (IT) பொதுவான கட்டுப்பாட்டு முறை**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கூட்டுத்தாபனம் கணனியூடாக கணக்கீடு செய்ய “கியுக் புக்” (Ouick Book) மென்பொருள் தொகுதியை 2020 ஆண்டு முதல் பயன்படுத்தியிருந்தது. தகவல் தொழிநுட்ப பிரிவொன்று இல்லாது மற்றும் மென்பொருள் தொகுதி மேற்பார்வை மற்றும் கட்டுப்பாட்டிற்காக பொறுப்புவாய்ந்த மேற்பார்வை அலுவலர் ஒருவரின்றி பயன்படுத்திய இத் தொகுதிக்காக முறையான உள்ளக கட்டுப்பாடு மற்றும் தொகுதிக் கட்டுப்பாட்டு யுக்கிகளை அறிமுகஞ் செய்திருக்கவில்லை. இந்த கணனிமயப்பட்ட கணக்கீட்டு தொகுதிக்கு சமாந்திரமாக எழுத்து மூலம் புத்தக ஏடுகளை பேணிச் செல்லல் 2020 ஆண்டில் நிறுத்தப்பட்டிருந்ததுடன், கடந்த கால அடிப்படையில் தொகுதிக்கு தரவுகள் மற்றும் தகவல்களை உள்ளீடு செய்ய மற்றும் தொகுதியின் தரவுகளை அகற்ற தொகுதியில் காணப்பட்ட விஷேட இயலுமை காரணமாக கணக்காய்விற்கு சமர்பிக்கப்படும் நிதிரீதியான எண்ணிக்கை தரவுகளில் நம்பகத்தன்மை தொடர்பாக பிரச்சினை ஏற்பட்டிருந்தது. கணனி தரவுகளின் மேலதிக பிரதியை (Backup) பாதுகாப்பாக வைத்துக் கொள்ளாமை மற்றும் அவற்றை மீண்டும் தொகுதிக்கு உள்ளீடு செய்ய முடியாமை, தொகுதிக்காக வினைத்திறனான | கணக்கீட்டு மென்பொருள் தொகுதி பற்றி கணக்காய்வாளர் நாயகத்தினால் சுட்டிக் காட்டியுள்ள பலவீனங்களை சரிசெய்ய தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. | நிறுவனத்தினுள் கணக்கீடு செய்ய பயன்படுத்தும் “Ouick Book” மென்பொருளை பயன்படுத்தும் போது பயிற்ச்சி மற்றும் உள்ளக கட்டுப்பாட்டு பாதுகாப்பு முறைகளை அறிமுகஞ் செய்து கணக்காய்வு ஐயவினாவின் மூலம் சுட்டிக் காட்டிய பிரச்சினைகளை சரிசெய்து கணனி மென்பொருளை பயன்படுத்த வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வன்தொகுதி இல்லாமை, வெளிவாரி கணக்காய்விற்காக தொகுதியிற்குள் பிரவேசிக்கவுள்ள சந்தர்ப்பம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதன் மீது முன்னைய ஆண்டு கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கையிலும் சுட்டிக் காட்டிய இந்த கணனிமயப்பட்ட கணக்கீட்டு தொகுதியிலான பாதுகாப்பற்ற நிலையை குறைத்துக் கொள்ள நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | |
| (ஆ) | கூட்டுத்தாபனத்தினால் கணக்கீடு செய்தல், திரைப்பட வாடகை வருமானம் தொடர்பாக அறிக்கை பேணிக் கொள்ளல் மற்றும் சம்பளம் உள்ளிட்ட ஊழயர் சேமலாப மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதிய கொடுப்பனவு தொடர்பாக அறிக்கை பேணிக் கொள்ள முறையே கியுக் புக், சீபா மற்றும் விசுவல் பேசிக் ஆகிய ஒன்றுக் கொன்று தொடர்பற்ற 03 கணனி மென்பொருட்களை பயன்படுத்தியிருந்தது. இம் மென்பொருட்களிற்கு இடையில் தரவுகள் மற்றும் தகவல்கள் சுயமாக பரிமாராததால் தவறு மற்றும் மோசடி இடம்பெறுவதற்காக அதிக வாய்ப்புக்கள் காணப்பட்டதுடன், நிறுவன உள்ளக கணக்காய்வு 2022 ஆண்டினுள் முற்றாக செயலிழந்தமை, கணனிமய உள்ளக கட்டுப்பாடு மற்றும் தொகுதி கட்டுப்பாட்டு பாதுகாப்பு முறை குறைவடைந்த காரணத்தால் கணனிமய எண்ணிக்கை தரவுகள் மற்றும் அறிக்கைகள் நம்பகத்தன்மை இல்லாதிருந்ததுடன், அவற்றை ஒப்பீட்டு ரீதியாக பரிசோதிக்க முடியாதிருந்தது. | இந் நிகழ்ச்சித் திட்டங்கள் ஒன்றுக் கொன்று சுயாதீனமான தொகுதியாக செயற்படுகின்றன. இந் நிகழ்ச்சித் திட்டங்களிற்கு இடையில் சுயமான தகவல் பரிமாற்றத்திற்காக தனியான நிகழ்ச்சித் திட்டமொன்றை தயாரிக்க வேண்டியுள்ளது. எதிர்காலத்தில் சுட்டிக் காட்டியுள்ளவாறு மேம்படுத்தல் செய்யப்படும். | உள்ளக கட்டுப்பாட்டு பாதுகாப்பு முறை மற்றும் உள்ளக கட்டுப்பாட்டு தொகுதியை தயாரித்து அறிமுகஞ் செய்ய வேண்டியதுடன், உள்ளக கணக்காய்வை மேற்கொள்ள தொகுதி கட்டுப்பாட்டு பாதுகாப்பு முறையை பயன்படுத்தி ஒப்பிடக்கூடியவாறு இவ்வறிக்கையை தயாரிக்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதிப் விளைவுகள்

கூட்டுத்தாபனத்தின் மீளாய்வாண்டு செயற்பாட்டு விளைவு ரூபா 9,417,553 ஆன மிகையாகக் காணப்பட்டதுடன், அதனோடு ஒத்த கடந்த வருடத்தின் மிகை ரூபா 1,139,436 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 8,278,117 ஆன வளச்சியொன்று அவதானிக்கப்பட்டது. இந்த வளர்ச்சிக்கு முக்கியமாக மீளாய்வாண்டினுள் மீண்டுவரும் செலவினம் மற்றும் திறைசேரியிடமிருந்து கிடைத்த ரூபா 100,000,000 ஆன மானியம் காரணமாக இருந்ததுடன், இதன் காரணமாக மொத்த செயற்பாட்டு நட்டமான ரூபா 90,582,447 தொகை ஈடுசெய்யப்பட்டு ரூபா 9,417,553 ஆன மிகையொன்று ஏற்பட்டிருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 இனங்காணப்பட்ட நட்டங்கள்

| | **கணக்காய்வு அவதானிப்பு** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| (அ) | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த பெறுமதி ரூபா 68,456,027 ஆன 69 திரையறங்குகள் ஊடாக கடன்பட்டோர் மீதி உறுதிப்படுத்தல் கடிதங்கள் | அவதானிப்பு சரியானது. | கடன் தவணை மற்றும் வட்டியை அறிவிடுவதற்கான செயன்முறை உயர் முகாமைத்துவத்தினால் முறையாக மற்றும் வினைத்திறனாக |

| | | | |
|---|---|---|---|
| | அழைபிக்கப்பட்டதுடன், திரையறங்குகள் மூடப்பட்டமை, உடைத்து அகற்றப்பட்டமை மற்றும் திரையறங்குகள் அம்முகவரிகளில் இல்லாத காரணத்தால் 27 மீதி உறுதிப்படுத்தல் கடிதங்கள் கூட்டுத்தாபனத்திற்கே மீண்டும் கிடைத்திருந்தன. அதன் பிரகாரம் அந்த 27 திரையறங்குகளிலிருந்து கூட்டுத்தாபனத்திற்கு அறவிட முடியாத நிலுவை ரூபா 23,380,463 ஆனது. | | செயற்படுத்தப்பட வேண்டியதுடன், நிலுவையான பழைய மீதிகளை அறவிடுவதற்கு மற்றும் தீர்ப்பதற்கு கடுமையான கட்டுப்பாட்டு யுத்திகளை பின்பற்றுவதற்கும் எதிர்காலத்தில் கொடுக்கப்படுகின்ற பணம் மற்றும் சேவையின் அடிப்படையில் கடன்பட்டோர் மீதிகள் அறவிட முடியாக் கடனாக இல்லாது அறவிட உயர் முகாமைத்துவம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த பெறுமதி ரூபா 71,334,541 ஆன 105 திரைப்பட தயாரிப்பு கடன்பட்டோர் ஊடாக கடன்பட்டுனர் மீதி உறுதிப்படுத்தல் கடிதங்கள் அழைபிக்கப்பட்டதுடன், பல காரணங்களால் அக்கடிதங்களிற்கிடையில் 22 கடிதங்களை கையேற்காததன் காரணமாக கூட்டுத்தாபனத்திற்கே மீண்டும் கிடைத்திருந்தன. அதன் பிரகாரம் மீதிகள் உறுதிப்படுத்தப்படாத 22 தயாரிப்பு கடன்படுனரூடாக கூட்டுத்தானத்திற்கு மீள் அறவிட முடியாத தயாரிப்பு கடன் தொகை ரூபா 20,401,950 ஆனது. | அவதானிப்பு சரியானது. | கடன் தவணை மற்றும் வட்டி அறவிடப்படுவதற்கான செயன்முறை உயர் முகாமைத்துவத்தினால் முறையாக மற்றும் வினைத்திறனாக செயற்படுத்தப்பட வேண்டியதுடன், நிலுவையான பழைய மீதிகளை அறவிடுவதற்கு மற்றும் அவற்றை தீர்ப்பதற்கு கடுமையான கட்டுப்பாட்டு யுத்திகளை பின்பற்றுவதற்கும் எதிர்காலத்தில் கொடுக்கப்படுகின்ற பணம் மற்றும் சேவையின் அடிப்படையில் கடன்பட்டோர் மீதிகள் அறவிட முடியாக் கடனாக இல்லாது அறவிட உயர் முகாமைத்துவம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு திரைப்பட தயாரிப்பு மற்றும் திரையறங்குகள் நவீனமயமாக்கலுக்காக பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ள கடன் தொகையில் ரூபா 81,499,905 மற்றும் திரையறங்குகளிடமிருந்து கூட்டுத்தாபனத்திற்கு பெற வேண்டிய மொத்த நிலுவை தொகை ரூபா 375,003,940 உள்ளடங்கலாக ரூபா 456,503,845 ஆன தொகை கூட்டுத்தாபனத்திற்கு பெற | திரைப்பட தயாரிப்பு மற்றும் திரையறங்கு நவீனமயப்படுத்தலுக்காக 2021 ஆம் ஆண்டினுள் ஒப்பந்தம் செய்யப்பட்டு கடன் விநியோகிக்கப்பட்டிருக்கவில்லை. நிலுவை தொகை | கடன் தவணை மற்றும் வட்டி அறவிடப்படுவதற்கான செயன்முறையை உயர் முகாமைத்துவத்தினால் முறையாக மற்றும் வினைத்திறனாக செயற்படுத்தப்பட வேண்டியதுடன், நிலுவையாகவுள்ள பழைய மீதிகள் அறவிடப்படுவதற்கு மற்றும் தீர்க்கப்படுவதற்கு கடுமையான கட்டுப்பாட்டு |

| | | | |
|---|---|---|---|
| | வேண்டியிருந்தது. அம் மொத்த பெற வேண்டிய தொகையில் மொத்தம் ரூபா 333,443,132 ஆன மிகைஅறவீடு மற்றும் ஐயக்கடனாக ஒதுக்கப்பட்டமையினால் 2021 திசெம்பர் 31 இல் அறவிடப்படக் கூடிய தேறிய கடன் மீதி ரூபா 123,060,713 ஆக அதாவது மொத்த கடன்பட்டோரில் 27 சதவீதமாக காணப்பட்டது. அந் நிலுவை தொகையை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அறவிடப்படுவதற்கு தொடர்புடைய அனைத்து நடவடிக்கைகளும் எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | உத்திகள் பின்பற்றப்படுவதற்கும் எதிர்காலத்தில் கொடுக்கப்படுகின்ற பணம் மற்றும் சேவையின் அடிப்படையில் கடன்பட்டோர் மீதிகள் அறவிட முடியா கடனாக இன்றி அறவிடப்படுவதற்கு உயர் முகாமைத்துவம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | கணக்காய்விற்கு சமர்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் பிரகாரம் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறுமதி ரூபா 53,565,690 ஆன அட்டுறு செலவுகளில் பெறுமதி ரூபா 2,262,126 ஆன அட்டுறு செலவு 05 ஆண்டுகளிற்கு முன்னரிலான கொடுக்கல் வாங்கல்களிற்காக கொடுக்க வேண்டியதானது. இதன் பிரகாரம் அட்டுறு செலவுகளை விரைவில் தீர்க்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | 2022 ஆண்டில் தீர்க்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | அட்டுறு செலவை விரைவில் தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | கூட்டுத்தாபனத்திற்கு கிடைக்கப் பெற வேண்டிய நிலுவை தொகையை அறவிடுவதற்காக 2021 ஆம் ஆண்டில் நிலுவைத் தொகை அறவிடல் குழுவொன்று நியமிக்கப்பட்டிருந்தது. பொது முயற்சிகள் திணைக்களத்தினாலும் 2021 திசெம்பர் 31 இல் கிட்டிய 10 ஆண்டுகளின் நிலுவை கடன் மற்றும் நிலுவை தொகையை உரிய முறைமையின் பிரகாரம் அறவிடப்படுவதற்கு ஆலோசனை பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்தது. எனினும், நிலுவைத் தொகை அறவிடும் குழுவின் பரிந்துரை 2023 மார்ச் 31 கணக்காய்வு திகதி வரையில் வழங்கப்பட்டு இருக்காததுடன், பொது முயற்சிகள் திணைக்களத்தின் ஆலோசனை பிரகாரம் நிலுவை கடன்களை அறவிடவும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2021 ஆம் ஆண்டில் நியமிக்கப்பட்ட நிலுவை தொகையை அறவிடும் குழுவின் பரிந்துரை இதுவரையில் சமர்ப்பிக்கப்படவில்லை. அப் பரிந்துரை சமர்ப்பித்தவுடனே அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். | பொது முயற்சிகள் திணைக்கள ஆலோசனை மற்றும் கடன் அறவிடல் குழுவின் ஆலோசனை பிரகாரம் செயற்பட்டு நிலுவை தொகையை அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஈ) | திபிரிகஸ்யாய பிரதேச செயலாளர் பிரிவிற்கு சொந்தமான குருதுவத்த கிராம சேவகர் பிரிவில் அமைந்துள்ள மு.தி.கோ 9848 ஆம் வரிபடத்தில் துண்டு இல 01 கொண்ட 1.1235 ஹெக்டேயார் அளவான காணியில் அமைந்திருந்தது. இந்த காணியின் | கூட்டுத்தாபனம் அமைந்துள்ள இந்த காணித்துண்டை சுவீகரித்துக் கொள்வதற்கு நடவடிக்கை | காணியின் சட்ட ரீதியான உரித்தினை சுவீகரத்துக் கொள்ள செயற்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | சட்ட ரீதியான உரித்து கூட்டுத்தாபனத்திற்கு சுவீகரிக்காது பிரதான அலுவலகம் உட்பட சில கட்டிடங்கள் நிர்மாணிக்கப்பட்டு அங்கு கூட்டுத்தாபனத்தின் பிரதான அலுவலகம் பேணிச் செல்லப்பட்டிருந்தது. | எடுக்கப்பட்டு வருகின்றது. | |
| (உ) | கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான 224 ஆம் இலக்கத்தை கொண்ட வளவில் அமைந்துள்ள இரண்டு மாடிக் கட்டிடத்தின் முதலாம் மாடி 4660 இலக்கத்தை கொண்ட குத்தகை ஒப்பந்தத்தின் பிரகாரம் 2019 சனவரி 14 ஆம் திகதி வரை மாதாந்தம் ரூபா 315,000 ஆன வாடகை அடிப்படையில் கூட்டுத்தாபனத்தினால் செலசினே தொலைக்காட்சி நிறுவனத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. குத்தகை ஒப்பந்தம் நாளாதுவரையாக்கப்படாது மற்றும் மொத்தம் ரூபா 12,111,000 ஆன நிலுவை குத்தகை தொகை செலுத்தப்படாது கட்டிடத்தை பயன்படுத்தி 2022 மார்ச் 28 ஆம் திகதி கட்டிடம் மீண்டும் கூட்டுத்தாபனத்திற்கு கையளிக்கப்பட்டிருந்தது. 2023 மே மாதம் வரை இந்த நிலுவை குத்தகை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்காததுடன், 2022 மார்ச் 28 திகதிக்கு பின்னர் அக் கட்டிடம் பயனுள்ள பணிக்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | கூட்டுத்தாபனத்திற்கு அறவிடப்பட வேண்டிய நிலுவைத் தொகையை அறவிட சட்ட ரீதியான நடவடிக்கைகள் எடுப்பதற்கு கோவை முன்வைக்கப்பட்டுள்ளது. | கூட்டுத்தாபனத்தின் நிகழ்கால பணிப்பாளர் சபை தீர்மானத்தின் பிரகாரம் நிலுவைத் தொகையை குத்தகைதாரரிடமிருந்து அறவிடப்படுவதற்கும் ஒப்பந்தத்தினை கைச்சாத்திட்ட ஒரு தரப்பினராக கூட்டுத்தாபன உயர் முகாமைத்துவம் குறித்த ஒப்பந்தத்தை செயன்முறைப்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஊ) | கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான 224 ஆம் இலக்க வளாகத்தில் அமைந்துள்ள ஒரு மாடிக் கட்டிடம் 2007 ஆம் ஆண்டு தொடக்கம் பிரபல்யமான நாட்டிய கட்டுப்பாட்டு சபைக்கு குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டிருந்தது. இரு தரப்பினர் இடையே இறுதியாக 2017 சனவரி 23 ஆந் திகதி கைச்சாத்திடப்பட்ட 4711 ஆம் இலக்க குத்தகை ஒப்பந்தம் 2018 திசெம்பர் 31 இல் நிறைவடைந்திருந்தது. நாட்டிய கட்டுப்பாட்டு சபையினால் அக் குத்தகை ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் மீறப்பட்டு அக் கட்டிடத்தினை உடைத்து அகற்றி 2576 சதுர அடியிலான இரு மாடிக் கட்டிடமொன்றினை நிர்மாணித்திருந்தது. குத்தகை ஒப்பந்தம் நிறைவடைந்து 03 | பிரபல்யமான நாட்டிய கட்டுப்பாட்டு சபை மற்றும் கூட்டுத்தாபனத்திற்கு இடையே புதிய குத்தகை ஒப்பந்தத்திற்கு உடன்படுவதற்கு குத்தகை ஒப்பந்த காலப்பகுதி தொடர்பாக தீர்மானம் எடுப்பதற்கு புதிய பணிப்பாளர் சபைக்கு பணிப்பாளர் சபை பத்தரிக்கையொன்றை | இந்த விடயம் தொடர்பாக பொறுப்பு கூற வேண்டிய தரப்பினருக்கு பொருத்தமான நடவடிக்கை எடுப்பதற்கும், உரிய எழுத்துமூல ஒப்பந்தத்திற்கு விரைவாக உடன்படுவதற்கும், நிலுவை தொகை அறவிடப்படுவதற்கும், கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான சொத்துக்கள் பாதுகாக்கப்படுவதற்கும் முகாமைத்துவம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் கடந்திருப்பினும், கடந்த ஆண்டு கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கை ஊடாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ள இந்த அவதானிப்பு தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டு புதிய கட்டிடத்திற்காக மதிப்பீட்டு அறிக்கையொன்று பெற்றுக் கொள்ளப்பட்டு வாடகை மதிப்பிடப்பட்டு, உரிய குத்தகை ஒப்பந்தத்திற்கு உடன்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (எ) | கலாநிதி ‘‘லெஸ்டர் ஜேம்ஸ் பீரிஸ்’’ அவர்கள் பெயரில் கூட்டுத்தாபன வளாகத்தினுள் நூதனசாலையொன்றை மற்றும் நூலகமொன்றை நிர்மாணிப்பதற்காக நிர்மாண மற்றும் மதியுரை நடவடிக்கைகளின் மதிப்பிடப்பட்ட கூட்டுப் பெறுமதி ரூபா 99,965,061 இற்கு அரச பொறியியல் கூட்டுத்தாபனத்திற்கு கையளிக்க இரு தரப்பு ஒப்பந்தமொன்றிற்கு உடன்பட்டு 2019 ஏப்ரல் 05 ஆம் திகதி அதன் நிர்மாணங்கள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. நகர அபிவிருத்தி அதிகார சபையின் மற்றும் அமைச்சரவை அங்கீகாரமின்றி ஆரம்பிக்கப்பட்ட இந்த நிர்மாணிப்பிற்கு 2021 திசெம்பர் 31 இல் ரூபா 3,134,107 ஆன தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. கடந்த ஆண்டு கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கை ஊடாக சுட்டிக்காட்டப்பட்ட இந்த நிர்மாணிப்பு நடவடிக்கைகள் 03 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக கைவிடப்பட்டிருந்ததுடன், நிர்மாணிப்பு ஆரம்பிக்கப்பட்ட இந்த கட்டிடத்தில் உள்ள இரும்பு கம்பிகள் கடுமையாக அரிக்கப்பட்டிருந்தமையினால் கட்டிடம் சேதமடைந்து வந்ததுகொண்டிருந்தது. | இக்கட்டித்தை நிர்மாண ஆரம்பித்துள்ள காணிக்காக புதிய உறுதியொன்றை தயாரித்துக் கொள்ள திம்பிரிகஸ்யாய பிரதேச செயலகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. பெறுகைகள் தீர்மானத்தின் பிரகாரம் அமைச்சரவை விஞ்ஞாபன வரைபொன்று 2020 ஆண்டில் வரிசை அமைச்சிற்கு சமர்பித்த போதும், அமைச்சினால் முன்நடவிக்கை இடம்பெறாததால் கருத்திட்டம் இடைநடுவே நின்றுள்ளது. | 2021 யூலை 19 திகதி நடைப்பெற்ற பொது முயற்சிகள் செயற்குழு ஆலோசனை பிரகாரம் செயற்பட வேண்டும். |
| (ஏ) | 2021 திசெம்பர் 31 திகதி பல நீதிமன்றங்களில் தொடர்ந்தும் விசாரிக்கப்பட்டு கூட்டுத்தாபனம் பிரதிவாதியான 15 வழக்குகளும், 05 தொழிலாளர் முறைபாடுகளும், திரைப்பட மற்றும் தொலைக்காட்சி நாடக பணிப்பாளர்கள் மற்றும் தயாரிப்பாளர்களால் மனிதஉரிமை ஆணைக்குழு பணிமனையில் தாக்கல் செய்துள்ள 09 மனிதஉரிமை முறைப்பாடுகளும், இறுதி தீர்ப்பு வழங்க முடியாது விசாரிக்கப்பட்டுக் கொண்டிருந்தன. இந்த விசாரணைகள் பல வருடங்களாக | நீதிமன்ற நடவக்கைகள் முடிவடையும் வரை வெற்றிடமாகவுள்ள பதவிகளுக்கு அன்மித்த அலுவலர்களிற்கு பதில் கடமைபுரிய நியமனம் வழங்கப்பட்டுள்ளது. ஆளணி மீள்திருத்தத்தின் பின்னர் நிறுவன | 2021 ஜுலை 19 திகதி இடம்பெற்ற பொது முயற்ச்சிகள் குழுக் கூட்ட ஆலோசனை பிரகாரம் இந்த விசாரணையை விரைவில் முடிவு செய்து ஊழியர் பிரச்சினைகளை குறைத்துக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | விசாரிக்கப்படுவதால் கூட்டுத்தாபன சில உயர் பதவிகளில் நிரந்தர பதவி வகிக்கும் அலுவலர்கள் இல்லாதிருப்பதும், நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு கடமையில் ஈடுபட்டுள்ள அலுவலர்களின் கடமை நேரத்தை கடத்த நேரிட்டுள்ளதும் கூட்டுத்தாபன செயற்பாடுகளிற்கு பாதகமான தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது. | கட்டமைப்பு மற்றும் ஆட்சேர்ப்பு திட்டத்தில் இடம்பெறும் மாற்றம் பிரகாரம் வெற்றிடங்களை பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (ஐ) | களணி தளுகம சரசவி படப்பிடிப்புக் கூடத்தில் பழமையான திரைப்படங்களின் கடினப்படங்கள் பாதுகாப்பிற்காக திரைப்பட காப்பகமொன்று பராமரிக்கப்பட்டு வந்தது. அத் திரைப்பட காப்பகத்தில் மேற்கொள்ளப்பட்ட பௌதீக கணக்காய்வின் போது அவ்வாறு பாதுகாப்பிற்காக வைக்கப்பட்டுள்ள கடினப்படங்கள் தொடர்பான எழுத்துமூல உறுதிப்படுத்தல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாததுடன், பாதுகாப்பாக களஞ்சியப்படுத்தி வைக்கப்பட்டிருந்த சில திரைப்படங்களின் கடினப்படங்கள் முழுமையாக அல்லது பகுதியளவில் காணாமல் போயிருந்தன. பாதுகாக்கப்பட்ட கடினப்படங்கள் தொடர்பான பட்டியல் நாளது வரையாக்கப்பட்டு பேணிச் செல்லப்படாத காரணத்தினால் காணாமல் போன கடினப்படங்கள் தொடர்பான பொருண்மையான தகவல்கள் அவதானிக்கப்படவும் முடியாது போனது. அக்கடினப்படங்கள் பாதுகாக்கப்படவும் முகாமைத்துவம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | சில கடினப்படங்கள் முழுமையாக அல்லது பகுதியளவில் அழிந்திருந்தன. எதிர்வரும் இருப்பு கணிப்பீட்டின் போது அவற்றை அறிக்கையிட்டு நடவடிக்கை எடுக்கப்படுவதற்கு குறித்துக் கொண்டேன். | கடினப்படங்கள் தொடர்பான பட்டியல் பேணிச் செல்லப்பட வேண்டியதுடன், கடினப்படங்களை பாதுகாப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 3.3 செயற்பாட்டு செயற்திறனின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 1971 இன் 47 ஆம் இலக்க தேசிய திரைப்பட கூட்டுத்தாபன சட்டத்தின் 4 (எ) பிரிவின் பிரகாரம் இலங்கையில் தயாரிக்கப்படுகின்ற திரைப்படங்களுக்காக இலங்கையினுள் அல்லது வெளியில் கேள்வி மற்றும் திரைப்பட வியாபாரத்தினை மேம்படுத்துவதற்காக கூட்டுத்தாபனம் போதுமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிகழ்காலத்தில் திரைப்பட தயாரிப்பு குழுவினாலேயே மேம்பாட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் | சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 1971 இன் 47 ஆம் இலக்க தேசிய திரைப்பட கூட்டுத்தாபன சட்டத்தின் 4 (ஏ) பிரிவின் பிரகாரம் இலங்கையினுள் மற்றும் இலங்கையின் வெளியே திரைப்படங்கள் தொடர்பான சந்தை ஆய்வு நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | இந்த பணிக்காக போதுமான நிதியேற்பாடு இல்லாமையின் காரணத்தினால் பணியை ஆரம்பிக்க முடியாது போனது. | சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (இ) | இலங்கையில் உயர் தரத்திலான திரைப்பட கலாச்சாரமொன்றை ஏற்படுத்துவதற்காக தேவையான கலை, ஆற்றல் மற்றும் தொழிநுட்ப அடிப்படையொன்றினை தயாரிக்கும் நோக்கங்களை முன்னனியாகக் கொண்டு திரைப்படவியல் தொடர்பான ஓராண்டு டிப்லோமா பாடநெறி ஆரம்பிக்கப்பட்டிருந்தது. 2020 ஆம் ஆண்டில் கொவிட் நிலையில் மாணவர்கள் இணைக்கப்பட்டிராததுடன், 2021 ஆம் ஆண்டில் 43 மாணவர்கள் இணைக்கப்பட்டு 2021 மார்ச் 27 ஆந் திகதி பாடநெறி ஆரம்பிக்கப்பட்டு 2022 செப்தெம்பர் 27 ஆம் திகதி இந்த பாடநெறி பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. இந்த டிப்லோமா திரைப்பட கல்லூரி வரையில் அபிவிருத்தி செய்வதற்கு செயற்திட்டம் தயாரிக்கப்பட்டு பாடத்திட்டம் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், 2023 மார்ச் மாதம் வரை அந் நடவடிக்கைகள் செயற்படுத்தப்படுவதற்கு முடியாதிருந்தது. | திரைப்பட டிப்லோமா பாடநெறியை மிகவும் உயர் நிலைக்கு கொண்டு வருவதற்காக பாடத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ள துடன், நிதி பிரச்சினைகளினால் வசதிகளை பூர்த்தி செய்து கொள்வதற்கு முடியாது போனது. | திரைப்படவியல் தொடர்பான ஓராண்டு டிப்லோமா பாடநெறியானது திரைப்பட கல்லூரி வரையில் அபிவிருத்தி செய்து கூட்டுத்தாபனத்தின் வருமானத்தினை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஈ) | ''திரைப்படங்கள் விநியோகம் மற்றும் காட்சிப்படுத்தலுக்குரிய முறைமை'' தயாரித்து அம் முறைமையை செயற்படுத்துவதற்காக 2021 யூன் 22 திகதிய அமப/21/1024/305/022 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் ஊடாக அங்கீகாரம் பெறப்பட்டிருந்ததுடன், அவ் அங்கீகாரம் பிரகாரம் திரைப்படங்கள் விநியோகிக்கும் செயன்முறை கூட்டுத்தாபனத்திற்கு கையகப்படுத்திக் கொள்வதற்காக இந்த செயன்முறை வர்த்தமானி பத்திரிக்கை ஊடாக பிரசித்தி படுத்தப்பட்டிருந்த போதிலும், 2022 ஒக்தோபர் மாதம் வரை மேற்படி விடயம் வர்த்தமானி பத்தரிக்கை ஊடாக பிரசித்திப்படுத்தியிருக்கவில்லை | திரைப்பட விநியோகம் மற்றும் காட்சிப்படுத்தும் முறைமை வர்தத்மானி பத்தரிக்கை ஊடாக பிரசித்திப் படுத்துவதற்கு 2021 ஆகஸ்ட் 17 ஆம் திகதி விடயத்திற்கு பொறுப்பான அமைச்சருக்கு முன்வைக்கப்பட்டுள் ளது. | கூட்டுத்தாபனத்தின் முன்னேற்றத்திற்காக 2021 யூன் 22 ஆந் திகதி அமைச்சரவை பெற்றுக் கொடுத்த அமைச்சரவை தீர்மானத்தினை செயற்படுத்தவும், அதற்கான வர்த்தமானி பத்தரிக்கை வெளியிடுவதற்கும் உயர் முகாமைத்துவம் செயற்படல் பொருத்தமானதாகும் |

### 3.4 விளைவற்ற அல்லது குறைப்பயன்பாடுடைய ஆதனம், பொறி மற்றும் உபகரணம்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | களணி தளுகம சரசவி படப்பிடிப்புக் கூடம் அமைந்துள்ள வளாகத்தினுள் காணப்படும் குளங்கள் சுத்தப்படுத்தி படப்பிடிப்பு கூடத்திற்கு பொருந்தும் வகையில் பராமரிப்பதற்கும், அவ வளாகத்தின் ஊடாக பாய்ந்து ஓடும் கால்வாயை சுத்தப்படுத்தி பராமரித்து செல்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், படப்பிடிப்பு வளாகத்தினுள் உடைத்து அகற்றப்பட வேண்டிய சேதமடைந்திருந்த ஒரு மாடிக் கட்டிடமொன்றும் காணப்பட்டது. படப்பிடிப்புக் கூடத்தின் கதவில் பெயர் பலகையொன்று பொருத்துவதற்கும், படப்பிடிப்பு வளாகம் படப்பிடிப்பு கூடத்திற்கு பொருந்துமாறு கண்கவரும் விதத்தில் பராமரித்து செல்வதற்கும் உயர் முகாமைத்துவம் கவனம் செலுத்தியிராததுடன், நகர சூழலொன்றில் அமைந்துள்ள இந்த படப்பிடிப்பு கூடம் மற்றும் அது அமைந்துள்ள வளாகம் கூட்டுத்தாபனத்திற்கு பொருளாதார நலன் பெறக்கூடிய பணியில் ஈடுப்படுத்தாமையினால் விளைவற்ற சொத்தாக காணப்பட்டது. | குளத்தினை செப்பனிடல், கால்வாயினை சுத்தப்படுத்தல் மற்றும் படப்பிடிப்பு கூட வளாகத்தினுள் காணப்படுகின்ற உடைத்து அகற்றப்பட வேண்டிய கட்டிடம் உடைத்து அகற்றப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. படப்பிடிப்பு கூடதினை அலங்கரிக்கும் பணிகள் நகர அபிவிருத்தி அதிகார சபை ஊடாக நிறைவேற்றிக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | படப்பிடிப்புக் கூட வளாகம் மற்றும் கட்டிடத்தினை பயனுள்ள பணிகளில் ஈடுப்படுத்தி வருமானத்தினை அதிகரித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 2021 திசெம்பர் 31 இல் மொத்த பெறுமதி ரூபா 870,659 ஆன கடினபடங்கள் மற்றும் இரசாயன பொருட்கள 2014 ஆம் ஆண்டு தொடக்கம் காலாவதியாகி இருந்தமை மற்றும் நிகழ்காலத்தில் பயன்படுத்தப்படாமை காரணத்தினால் பிரதான களஞ்சியத்தினுள் காணப்பட்டதுடன், கடந்த ஆண்டு கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கையிலும் சுட்டிக்காட்டப்பட்டிருந்த இந்த விளைவற்ற சொத்து பராதீனம் செய்ய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இந்த இருப்பில் பகுதியொன்று காட்சிப்பொருளாக வைக்கப்பட்டுள்ளதுடன், எஞ்சியவை பராதீனம் செய்வதற்கு விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும். | பயன்பாட்டிற்கு எடுக்க முடியாத கடின படங்கள் மற்றும் இரசாயனப் பொருட்கள் தொடர்பான சரியான தகவல்கள் பொருள் மெய்மையாய்வின் போது இனங்காணப்பட்டு அவை சுற்றாய்வு குழு தீர்மானத்தின் பிரகாரம் மற்றும் சட்டதிட்டங்கள் பிரகாரம் பராதீனம் செய்வதற்கு நடவடிக்கை |

| | | | |
|---|---|---|---|
| | | | எடுக்கப்படல் வேண்டும். |
| (இ) | கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான ‘‘தரங்கனி’’ திரையறங்கின் நடவடிக்கைகளுக்காக ரூபா 11,460,155 கொடுப்பனவு செய்யப்பட்டு, 4K DCP பல்லுருக்காட்டியொன்று கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. எனினும், இந்த இயந்திரம் செயற்பாட்டு நிலைக்கு கொண்டு வருவதற்கு தேவையான மேலதிக பகுதிகள் 2022 ஆம் ஆண்டு வரையிலும் கொள்வனவு செய்வதற்கு கூட்டுத்தாபனத்திற்கு முடியாதிருந்தது.இந்த பல்லுருக்காட்டி செயற்பாட்டு நிலைக்கு கொண்டு வருவதற்கு முடியாததினால் அதை கொள்வனவு செய்வதற்கு செலவு செய்த பணம் மற்றும் ‘‘தரங்கனி’’ திரையறங்கு விளைவற்று காணப்பட்டது | இந்த இயந்திரம் பழுதுபார்த்தலுக்காக முகவர் நிறுவனத்திற்கு முன்வைக்கப்பட்டு பரிசோதனை அறிக்கையொன்று மற்றும் மதீப்பீடொன்று பெற்றுக் கொண்டு அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | இந்த பல்லுருக்காட்டி செயற்பாட்டு நிலைக்கு கொண்டு வந்து ‘‘தரங்கனி’’ திரையறங்கிற்கு வருமானம் ஈட்டும் நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தப்படல் வேண்டும். |

**3.5 பெறுகைகள் முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | திரைப்பட இறக்குமதி, விநியோகம் மற்றும் பதிவு செய்வதனை முறையாக்க கணனி முறைமையொன்றை இஸ்தாபிக்கும் (E–Ticketing) கருத்திட்டமொன்றிற்கு 2021 அங்கீகார திருத்திய வரவு செலவு திட்ட பிரகாரம் ஒதுக்கிய மதிப்பீட்டுத் தொகை ரூபா 11,000,000 ஆனது. 2021 திசெம்பர் 31 திகதியளவில் இதன் பௌதீக முன்னேற்றம் 40 சதவீதமானதுடன், நிதிரீதியான முன்னேற்றம் 0 சதவீதமானது. குறித்த கருத்திட்டத்தின் ஆரம்ப பெறுகைகள் நடவடிக்கைகளுக்காக விலைமனு கோரி ஒரு நிறுவனத்தை தெரிவு செய்தல் மாத்திரம் மீளாய்வாண்டினுள் இடம்பெற்றிருந்தது. | இக்கருத்திட்ட வழங்குனர் 2022.04.19 தெரிவு செய்யப்பட்டுள்ளார். அதன் பிரகாரம் 2022 ஆண்டில் கொடுப்பனவு செய்ய ஆரம்பிக்கப்பட்டுள்ளது. | பெறுகை நடவக்கையை விரைவில் மேற்கொண்டு கணனித் தொகுதி இஸ்தாபிக்கப்பட நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 2021 ஆம் ஆணடில் களனி தலுகம சரசவி படப்பிடிப்புக் கூடத்திற்காக மொத்தம் ரூபா 857,050 ஆன தொகை கொடுப்பனவு செய்யப்பட்டு 5.1 அளவிலான ஒலி மீளுருவாக்கும் அமைப்பொன்று கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. அந்த பெறுகை பணி நிறைவேற்றம் போது அரச பெறுகை வழிக்காட்டி கோவையின் 2.5.1 (ஈ), 4.3.2 மற்றும் 5.3.2 பிரிவுகள் பிரகாரம் கடந்த பெறுகை நடவடிக்கைகள், மொத்த கிரய | இது மிகவும் அவசரமான பெறுகை பணியொன்றாக காணப்பட்டதுடன், இந்த தொகுதி தாபிக்கப்பட்டதன் பின்னர் தற்போது அண்ணவளாக ரூபா 2.3 மில்லியன் வருமானமொன்று ஈட்டப்பட்டுள்ளது. | பெறுகை வழிக்காட்டி கோவை பிரகாரம் பெறுகை நடவக்கைகள் மேற்கொள்ள வேண்டும். |

மதிப்பீடு அங்கீகரித்தல் மற்றும் மனுதாரர்களிடமிருந்து கோரப்படல் போன்ற பெறுகை நடவடிக்கைகள் பெறுகை வழிக்காட்டி கோவையின் பிரகாரம் நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை.

**3.6 மனிதவள முகாமைத்துவம்**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரை** |
| --- | --- | --- |
| கூட்டுத்தாபனத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 186 ஆக காணப்பட்டதுடன், உள்ளவாரான பதவியணி 119 ஆனது. 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட பதவிகளில் 67 பதவி வெற்றிடங்கள் காணப்பட்டன. அவ் வெற்றிடங்களில் 10 பதவிகள் தற்போது கூட்டுத்தாபனத்தின் நிரந்தர பதவி வகிக்கும் உத்தியோகத்தரினால் பதிற் கடமை, கடமை நிறைவேற்றல், கடமை மேவுகை செய்தல் போன்ற பல்வேறு அடிப்படைகளில் நிரப்பப்பட்டுள்ளன. கூட்டுத்தாபனத்தின் சிரேஷ்ட மட்டத்தின் 03 பதவிகள் காணப்பட்டதுடன், அவ் 3 பதவிகளில் 02 பதவிகள் நிரந்தரமல்லாத மாற்று அடிப்படையில் உத்தியோகத்தர்கள கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். கூட்டுத்தாபனத்தின் இந்த ஊழிய வெற்றிடங்கள் நீண்ட காலமாக நிரந்தர அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டு நிரப்பப்படாமை காரணத்தினால் அதன் செயற்பாடு மற்றும் செயலாற்றலுக்கு பாதகமாக தாக்கமளித்திருந்தது | வெவ்வேறு காரணங்களினால் ஆட்சேர்ப்பு செய்ய முடியாத பதவிகளுக்காக தொடர்புடைய அண்மைய உத்தியோகத்தருக்கு பதிற் கடமை/ கடமை நிறைவேற்றல் அடிப்படையில் நியமனங்கள் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது. பதவியணி மறுசீரமைப்பின் பின்னர் வெற்றிடங்கள் நிரப்பப்படும். | அரசின் நிகழ்கால ஆலோசனை பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டு ஊழியர் முகாமைத்துவம் மேற்கொண்டு நிறுவனத்தின் பணிப்பொறுப்புக்கள் நிறைவேற்றப்படல் வேண்டும். |

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரை** |
| --- | --- | --- |
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் III ஆம் பிரிவு 16(2) பந்தி மற்றும் 2020 ஆகஸ்ட் 28 திகதிய இலக்கம் 01/2020 கொண்ட பொது நிதி சுற்றறிக்கையின் 15.1 பந்தி ஊடாக உள்ளடக்கிய நிதிப் பிரமாணம் 877(2)(ஈ) பிரிவு பிரகாரம் நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களில் நிதிக்கூற்று மற்றும் வருடாந்த நகல் அறிக்கையை கணக்காய்விற்கு கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்க வேண்டிய போதும், | 2021.12.31 திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2022 பெப்ரவரி மாதம் இறுதியளவில் தயாரித்திருந்த போதும் புத்த சாசனம், சமய மற்றும் காலாசார அமைச்சின் கீழ் இருந்த திரைப்பட கூட்டுத்தாபனம் பொதுசன ஊடக அமைச்சின் கீழ் கொண்டுவரப்பட்டதனால் அந் நிதிக்கூற்றுக்களிற்காக அங்கீகாரம் பெற்றுக் கொள்ளல் புதிய பணிப்பாளர் சபை மற்றும் கணக்காய்வுக் குழுவொன்றை நியமித்துக் கொள்ளும் வரை தாமதமானது. அதன் பிரகாரம் புதிய பணிப்பாளர்களை நியமித்து 2022.11.11 திகதி நடாத்தப்பட்ட | தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் மற்றும் நிதிப் பிரமாணம் பிரகாரம் நிதிக்கூற்றுக்களை உரிய திகதிக்கு கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் |

| | |
|---|---|
| கூட்டுத்தாபனத்தின் 2021 ஆம் ஆண்டு நிதிக்கூற்றுக்கள் ஓராண்டு தாமதத்தின் பின்னர் 2023 பெப்ரவரி 21 திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | பணிப்பாளர் சபையின் தீர்மானம் பிரகாரம் சமர்பிக்கப்பட்ட 2021 நிதிக்கூற்றுக்கள், கணக்காய்வுக் குழுவிற்கு சமர்பித்து அப் பரிந்துரையின் மீது மீண்டும் பணப்பாளர் சபைக்கு சமர்பித்து அங்கீகாரத்தை பெற்று 2023 பெப்ரவரி மாதம் கணக்குகள் கணக்காய்விற்கு வழங்கப்பட்டன. |

**4.2 வருடாந்த அறிக்கை**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச சட்டத்தின் 14 ஆம் பிரிவு மற்றும் 2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.3 பிரிவின் பிரகாரம் குறித்த நிதி ஆண்டு நிறைவடைந்து 150 நாட்களுக்குள் 03 மொழிகளிலான வருடாந்த அறிக்கைகள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், கூட்டுத்தாபனத்தின் வருடாந்த அறிக்கை 2015 இன் பின்னர் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 2015 – 2017 வருடாந்த அறிக்கைகள் அச்சிடப்பட்டுள்ளதுடன், பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிப்பதற்கு வரிசை அமைச்சிற்கு முன்வைக்கப்பட்டுள்ளன. 2018, 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளுக்கான வருடாந்த அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. | 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2020 ஆம் ஆண்டு வரையான வருடாந்த அறிக்கைகளை தாமதமின்றி பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

**4.3 கூட்டிணைந்த திட்டடம்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2003 யூன் 02 திகதிய பிஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 4.2.2 பிரிவின் பிரகாரம் தேசிய திரைப்பட கூட்டுத்தாபனத்தின் 2021 ஆம் ஆண்டினை மேவுகை செய்து கூட்டிணைந்த திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | வரிசை அமைச்சின் ஆலோசனையை பெற்றுக் கொண்டு மூவாண்டு திட்டமொன்றை தயாரித்து கணக்காய்விற்கு சமர்ப்பக்க நடவடிக்கை எடுக்கின்றேன். | 2003 யூன் 02 திகதிய பிஈடீ/12 திகதிய பொது முயற்சிகள் சுற்றறிக்கை பிரகாரம் கூட்டிணைந்த திட்டத்தை தயாரித்து அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டு அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 4.4 உள்ளக கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் VII ஆம் பகுதி 40 (1) பந்தியின் பிரகாரம் குறித்த நிறுவனத்திற்காக நிறுவன உள்ளக கணக்காய்வாளர் ஒருவர் இருக்க வேண்டிய போதும், 2021 திசெம்பர் இல் உள்ளக கணக்காய்வாளர் மற்றும் உள்ளக கணக்காய்வு பிரிவில் சேவையாற்றிய உத்தியோகத்தர் ஒருவர் கூட்டுத்தாபன சேவையில் இருந்து விலகிய பின்னர் கூட்டுத்தாபனத்தின் உள்ளக கணக்காய்வு பிரிவு செயலற்று காணப்பட்டது. | உள்ளக கணக்காய்வாளர் ஒருவரை ஆட்சேர்ப்பு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வந்த போதிலும், வரிசை அமைச்சின் ஆலோசனை மற்றும் அரச கொள்கை அடிப்படையில் ஆட்சேர்ப்பு இடைநிறுத்தப்பட்டுள்ளது. | உள்ளக கணக்காய்வாளர் ஒருவரை நியமித்து அல்லது திறைச்சேரி ஆலோசனை பிரகாரம் செயற்பட்டு உள்ளக கணக்காய்வு பிரிவிற்காக பதவியணி ஈடுபடுத்தப்பட்டு உள்ளக கணக்காய்வு மேற்கொள்ளப்படல் வேண்டும். |